# மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண்.2/2025 ல்**

**அசல் வழக்கு எண்.276/2019**

1. பொய்யாமொழி (இறந்து விட்டார்),
த/பெ முத்துச்சாமி,
கீரனூர் எழில் நகர் 3 வது வீதி,
குளத்தூர் தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம். ...மனுதாரர்/வாதி

2. முத்துச்சாமி,
த/பெ நடேசன் நரங்கியர்,
கீரனூர் எழில் நகர் 3 வது வீதி,
குளத்தூர் தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம்.

3. வளர்மதி,
க/பெ முத்துசாமி,
கீரனூர் எழில் நகர் 3 வது வீதி,
குளத்தூர் தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம். ... மனுதாரர்கள்/இறந்த வாதியின் வாரிசுகள்

/ எதிர் /

அனந்தலெட்சுமி,
க/பெ கதிரவன்,
81/1D கரூர் பைபாஸ் ரோடு,
அண்ணாமலை நகர்,
திருச்சி டவுன் மற்றும் தாலுக்கா,
திருச்சி மாவட்டம். ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது, கடந்த 28.07.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, 2,3 மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சகாதேவன் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.K. ஜெயசீலன் அவர்களும் முன்னிலையாகியும், மனு எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## உத்தரவு

1. இந்த மனுவானது 2ம் மனுதாரரால், 1ம் மனுதாரர்/இறந்த வாதியின் வாரிசுகளாக, அவரது பெற்றோர்களான 2,3 மனுதாரர்களை, அசல் வழக்கில் வாதியின் வாரிசுகளாகச் சேர்க்க உத்தரவிடக் கோரி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 22 விதி 3—ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 2ம் மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், 2ம் மனுதாரரின் மனைவி 3ம் மனுதாரர் என்றும், இவர்கள் இருவரும் 1ம் மனுதாரரின் வாரிசுகள் என்றும், இறந்த 1ம் மனுதாரர் பொய்யாமொழி அவர்களது மகன் என்றும், 2,3 மனுதாரர்களின் மகன் அசல் வழக்கை விளம்புகை மற்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தார் என்றும், அவர் திருமணமாகாமல் 2,3 மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு விட்டு 13.05.2025 அன்று இறந்து விட்டார் என்றும், இந்து

வாரிசுரிமைச் சட்டப்படி வழக்குச் சொத்து 1ம் மனுதாரரின் வாரிசு என்ற முறையில் 2,3 மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டிருக்கிறது என்றும், வாரிசுகள் என்ற முறையில் தொடர்ந்து வழக்கை நடத்த 2,3 மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என்றும், 2,3 மனுதாரர்களை அவர்களது மகனின் வாரிசுகளாக சேர்க்க வேண்டியது அவசியமாகிறது என்றும், இல்லையேல் அவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், எனவே, 2,3 மனுதாரர்களை அசல் வழக்கில் 2,3 வாதிகளாக சேர்த்து மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனு தவறானது என்றும், 1ம் மனுதாரர் 13.05.2025 அன்று இறந்து விட்டதால் அவரது வாரிசாக 2,3 மனுதாரர்களை சேர்க்கக் கோரியுள்ளது நிலைநிறுத்தத்தத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்றும், இந்த பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துப்பூர்வ அறிக்கையில் கூறப்பட்டுள்ள கூற்றுகள் எதிர் வழக்குரையின் ஒரு பகுதி என்றும், மனுவில் 2,3 மனுதாரர்கள் 1ம் மனுதாரரின் வாரிசுகள் என்று கூறப்பட்டுள்ளது மறுக்கப்படுகிறது என்றும், இந்த மனுவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு மனுதாரர்கள் அதை நிரூபிக்க வேண்டும் என்றும், 1ம் மனுதாரர் திருமணமாகதவர் என்றும், அவர் உயில் எதுவும் எழுதி வைக்காமல் 13.05.2025 அன்று இறந்து விட்டதாகவும் கூறுவது மறுக்கப்படுகிறது என்றும், அசல் வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்றும்,

இறந்த வாதியின் சட்டப்பூர்வ வாரிசாக வழக்கை தொடரக் கோரும் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

4. இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு கருத்துகளும், வழக்கு ஆவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது வழக்குச் சொத்து காலஞ்சென்ற வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டு, அவரது அனுபவத்தில் உள்ள சொத்து என உரிமை விளம்பல் செய்தும், அதன் தொடர் பரிகாரமாக வழக்குச் சொத்தில் வாதிக்குள் அனுபவத்தில் பிரதிவாதியோ, அவரது ஏஜெண்டோ அவரது ஆட்களோ எந்தவித குறுக்கீடும் செய்யாமல் இருக்க அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இந்த மனுதாரர்கள் அசல் வழக்கு வாதியின் பெற்றோர் ஆவர். மேலும். 1ம் மனுதாரர் உயில் எதுவும் எழுதி வைக்காமல் 13.05.2025 அன்று இறந்து விட்டதாகவும், இந்து வாரிசுரிமைச் சட்டப்படி வழக்குச் சொத்து 1ம் மனுதாரரின் வாரிசு என்ற முறையில் 2,3 மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டிருக்கிறது என்றும், வாரிசுகள் என்ற முறையில் தொடர்ந்து வழக்கை நடத்த 2,3 மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என்றும், 2,3 மனுதாரர்களை அவர்களது மகனின் வாரிசுகளாக சேர்க்க வேண்டியது அவசியமாகிறது என்றும், இல்லையேல் அவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால்,

எதிர்மனுதாரர் தரப்பில் அதனை மறுத்து அசல் வாதியின் வழக்கே சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே அவரது பெற்றோர் சட்டப்பூர்வ வாரிசாக அசல் வழக்கை தொடரக் கோரும் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

7. இந்த 2,3 மனுதாரர்கள் அசல் வழக்கு வாதியின் பெற்றோர் ஆவர். கூடுதல் வாதிகளின் உரிமை தொடர்பாகவும், அசல் வழக்கில் வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பது தொடர்பாகவும், அசல் வழக்கில் தான் தீர்மானிக்க முடியும். எனவே, அசல் வாதி இறந்து விட்டதால் அவரது பெற்றோரான மனுதாரர்கள் இந்த வழக்குக்கு தேவையான மற்றும் அவசிய தரப்பினராவர். எனவே, நீதியின் நலன் கருதி இந்த மனு அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது.

8. **முடிவாக,**

இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.08.06 17:18:49 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.08.06 17:18:55 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**